## மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால்தான்

# கடந்த 9 ஆண்டுகளில் ரூ.100 லட்சம் கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது!

## அண்ணாமலைக்கு கே.எஸ்.அழகிரி பதில்!



சென்னை, ஆக. 4 -

மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் தான் கடந்த 9 ஆண்டுகளில் ரூ.100 லட்சம் கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலைக்கு பதிலளித்துள்ளார்.

இது குறித்து கே.எஸ். அழகிரி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் பா.ஜ.க. கட்சியை வளர்க்க பல்வேறு உத்திகளை கடந்த காலத்தில் கையாண்டு வந்தனர். ஆளுநரின் ஆதரவோடு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. ஆட்சிக்கு எதிராக பல்வேறு இடையூறுகளைச் செய்து வந்தனர். ஆனால், அது மக்களிடையே வெறுப்பை வளர்த்து பா.ஜ.க.வின் வளர்ச்சியைப் பாதிக்கிற நிலைக்குச் சென்று விட்டது. தற்போது பா.ஜ.க.வை வளர்க்க அண்ணாமலை இராமநாதபுரத்திலிருந்து நடக்கத் தொடங்கி யிருக்கிறார். அவரது நடை பயணம் எவ்வளவு கேலிக் கூத்தானது என்பதை நாள்தோறும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் செய்திகளாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. அண்ணாமலையின் நடைப் பயணம் டெம்போ டிராவலாகவும், சொகுசு பேருந்து பயணமாகவும் மாறியிருப்பதைப் பார்த்து மக்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள்.

தமது நடை பயணத்தில் அண்ணாமலை பேசும் போது, பல்வேறு ஆதாரமற்ற அவதூறு களை அள்ளி வீசி வருகிறார். தமிழ்நாடு அரசின் கடனை குஜராத் அரசோடு ஒப்பிடுகிறார். அண்ணாமலையின் முதுகு அவருக்குத் தெரியாது. ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு 9 ஆண்டுகளில் ரூபாய் 100 லட்சம் கோடி கடன் உயர்ந்திருக்கிறது என்பதை அண்ணாமலை அறிவாரா? 2014 ஆம் ஆண்டில் இந்தியாவின் கடன் ரூபாய் 55 லட்சம் கோடியாக இருந்தது. இதற்கு முன் இந்தியாவை 67 ஆண்டுகளாக 14 பிரதமர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் வைத்து விட்டுச் சென்ற கடன் தொகை ரூபாய் 55 லட்சம் கோடி தான். ஆனால், 2014 இல் மோடி ஆட்சிக்கு வந்தது முதற்கொண்டு கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் சுமார் ரூபாய் 100 லட்சம் கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது. இத்தகைய பெரும் கடன் சுமைக்கு மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே காரணம்.

2023 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவின் மொத்த கடன் ரூபாய் 169 லட்சம் கோடி. கடந்த 9 ஆண்டுகளில் இரண்டரை மடங்கு இந்தியாவின் கடன் உயர்ந்திருக்கிறது. ஒரு நாட்டின் கடன் என்பது அந்த நாட்டின் மக்கள் தலையில் தான் விழுகிறது. அந்த வகையில் பார்க்கிற போது 2014க்கு முன் இந்திய குடிமகன் ஒருவர் மீது சராசரியாக ரூபாய் 43,000 கடன் இருந்தது. ஆனால், அது தற்போது ரூபாய் 1 லட்சத்து 10 ஆயிரமாக உயர்ந்துள்ளது. சுமார் இரண்டரை மடங்கு ஒரு தனிநபர் மீதான கடன் அதிகரித்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு, வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வருமானத்தில் 20 சதவிகிதத்தை வட்டிக்கு மட்டுமே செலவு செய்கிற நிலையில் தான் மோடி ஆட்சியின் நிதி நிர்வாகம் அவல நிலையில் உள்ளது. ஒவ்வொரு குடிமகன் மீதும் இவ்வளவு கடனை சுமக்க வைப்பது தான் மோடி மாடல் ஆட்சியா?

தமிழகத்தின் கடன் சுமையை குஜராத் மாநிலத்தோடு ஒப்பிடுகிறார். தமிழகத்தில் கடன் யார் ஆட்சியில் எவ்வளவு அதிகரித்தது என்பதை அரைகுறை அண்ணாமலை ஆய்வு செய்யாமல் அவதூறான கருத்துகளைப் பரப்பலாமா? 2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலிருந்து வெளியேறும் போது 34,540 கோடி ரூபாயாக இருந்த தமிழகத்தின் கடன் அளவு 2006 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்காலம் நிறைவடையும் போது 63,848 கோடி ரூபாயாக அதிகரித் திருந்தது. 5 ஆண்டு காலத்திற்குள் கடன் அளவு சுமார் 84 சதவிகிதம் அதிகரித்தது. இதை அண்ணாமலையால் மறுக்க முடியுமா?

2006 ஆம் ஆண்டில் ஆட்சியை அ.தி.மு.க. பறிகொடுத்த பிறகு ஆட்சிக்கு வந்த தி.மு.க. அதன் 5 ஆண்டு நிறைவில் அதாவது 2011 ஆம் ஆண்டில் ஆட்சியை விட்டு விலகும் போது 1 லட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருந்தது. ஆனால், தமிழக அரசின் கடன் 2011 முதல் 2016 வரை அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 2.28 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்தது. இதைத் தொடர்ந்து 2016 முதல் 2021 வரை அ.தி.மு.க.வின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் 4.85 லட்சம் கோடி ரூபாயாக தமிழகத்தின் கடன் அளவு அதிகரித்தது. பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க. ஆட்சியில் தான் தமிழக அரசின் நிதிநிலைமை திவாலான நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனவே, மக்கள் பேராதரவோடு ஆட்சியில் அமர்ந்து 27 மாதங்களாக மக்கள் நலன்சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி நாள்தோறும் நிறைவேற்றி வருகிறது. கொடுத்த வாக்குறுதிகளில் 85 சதவிகிதத்தை 27 மாதங்களில் நிகழ்த்தி சாதனை படைத்து வருகிறது. ஆனால், 2014 தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகள் மோடி ஆட்சியில் நிறைவேற்றப்பட்டனவா? ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டதே? கடந்த 9 ஆண்டுகளில் 18 கோடி பேருக்கு வேலை வழங்கப்பட்டதா? விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக கூட்டுவேன் என்று மோடி வாக்குறுதி கொடுத்தாரே? குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும் என்று அறிவித்தாரே? 2013 நவம்பர் 7 ஆம் தேதி சத்தீஸ்கரில் நரேந்திர மோடி பேசும் போது வெளிநாடுகளில் பதுக்கியிருக்கிற கருப்பு பணத்தை மீட்டு ஒவ்வொரு குடிமக்களுக்கும் 15 இல் இருந்து 20 லட்சம் வரை வழங்குவேன் என்று பேசினாரே? இதை எவராவது மறுக்க முடியுமா? பேசியபடி செயல்பட்டாரா? கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறை வேற்றாத மோடி ஆட்சியின் சாதனைகள் என்று கூறுவதற்கு என்ன இருக்கிறது? அண்ணாமலை அவர்களே, கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லெறிவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஜோலார்ப்பேட்டை ரயில் நிலையத்தில்

# 'வந்தேபாரத்' ரயில் நின்று செல்ல அனுமதிக்க வேண்டும்!

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 4-

சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் வகையில் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் 'வந்தே பாரத்' எக்ஸ்பிரஸ் ரயில் நின்று செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தினார்.

இது குறித்து விதி எண் 377ன் கீழ் அவர் வலியுறுத்தியதாவது:-

தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகர் ஒன்றின் பக்கத்தில் உள்ள ஜோலார்ப் பேட்டை ரயில்வே ஜங்ஷ னின் முக்கியத்துவம் பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அது மிகப் பெரிய ரயில் நிலையம் மட்டுமல்ல; தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கான ரயில்கள் கடந்து செல்லும் ரயில் நிலையமும் ஆகும்.

அது மட்டுமின்றி ஏலகிரி என்கிற மலைப்பிரதேசம் ஜோலார்ப் பேட்டைக்குப் பக்கத்திலேயே இருக்கிறது. அது ஒரு முக்கியமான சுற்றுலாதலமாகும்.

அதன் காரணமாக, எம்.ஜி.ஆர். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து கோவை செல்லும் 'வந்தே பாரத்' ஜோலார்ப்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும் என்று பெருவாரியான மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அது நியாயமான கோரிக்கையும் கூட.எனவே இந்த 'வந்தே பாரத்' எக்ஸ்பிரஸ் ரயில் (20643-20644) ஜோலார்ப்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது பொதுமக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதோடு ஏலகிரி மலைக்கு வரும் உள்நாடு - வெளிநாடு சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தி உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி வி. முத்து
### ஆகஸ்ட் 4 (2016)



**சங்ககிரி பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**ஒன்றுபட்ட சேலம் மாவட்ட பிரதிநிதியாகவும் – மாவட்ட துணைச் செயலாளராகவும் – நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1971, 1996 ஆகிய இரண்டு முறை சங்ககிரி தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதி வண்டிகளை சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றிக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், கமலஜோதிதேவேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# ரூ.10லட்சம்மதிப்பிலானநலத்திட்டஉதவிகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

மரக்காணம் ஆக.4-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா கவியரங்கம் மரக்காணத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் தலைமை தாங்கினார். விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் , துணைச் சேர்மன் பழனி,பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார்,மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கவியரங்க நிகழ்ச்சியில் முனைவர் கவிஞர் இரவி பாரதிதலைமையில் 'பன்முக ஆற்றலின்பாட்டுடைத் தலைவர்' என்ற தலைப்பில் 'இலக்கிய உலகின் இமயம் கலைஞர்' என்ற தலைப்பில் சொர்க்கோ இரா.கருணாநிதியும், 'மகளிர் உலகை மாண்புறச் செய்த கலைஞர்' தலைப்பில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினியும், 'தொழிலாளர்களின் தோழர்' கலைஞர் என்ற தலைப்பில் கவிஞர் ஆர்.சுந்தரகாந்தியும் 'அரசியல் உலகின் அதிசயம்' கலைஞர் என்ற தலைப்பில்கவிஞர் கங்கை மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு புகழுரையாற்றினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிகழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என 1000 நபர்களுக்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ் மொழிக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் தமிழ் சமுதாயத்திற்காகவும் உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்காக தன் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர் முத்தமிழர் கலைஞர்எனப் புகழாரம் சூடினார்.

கவியரங்கத்தில்பேசிய கவிஞர் சொற்கோ இரா.கருணாநிதி:

இந்தியாவின் தலைவர்களுக்கெல்லாம் தலைவனாக திகழ்ந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்றும்.

கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி பேசுகையில்:

என்ன செய்தார் கலைஞர் என்ற கேள்விக்கு ?

தமிழர் மாண்புற உழைத்தவர் கலைஞர், தமிழை மீட்டெடுக்க உழைத்தவர் கலைஞர், தமிழர்கள் வெற்றி பெற உழைத்தவர் கலைஞர், தமிழர் மொழி போற்றுவதற்கு உழைத்தவர் கலைஞர், தமிழர்வளம் பெற உழைத்தவர் கலைஞர், தமிழர் கல்வி , மொழி பெறுவதற்கு உழைத்தவர் கலைஞர், தமிழர் தலை நிமிர உழைத்தவர் கலைஞர், இத்தனையும் கொடுத்தவர் கலைஞர் என்றார்.

'தொழிலாளர்களின்தோழர் கலைஞர்' என்ற தலைப்பில் பேசியகவிஞர் ஆர். சுந்தரகாந்தி:

தொழிலாளர்களின் கண்ணுக்குள் உள்ள கவலைகளையும் வறுமையும் கண்டு பிடித்த விஞ்ஞானி கலைஞர் என்றும், அதனால் தான் கலைஞர் ஆட்சியில் இழுத்து செல்லும் கை ரிக்ஷாவை ஒழித்து தொழிலாளர்கள் மேம்பட சைக்கிள் ரிக்ஷாவை கொண்டு வந்தவர் முத்தமிழர் கலைஞர் என கலைஞரின் வரலாற்றை நினைவு படுத்தினார்.

கவிஞர்கங்கை மணிமாறன் பேசுகையில்:

கலைஞர் படைத்த வசனங்கள், துயரங்கள், கடிதங்கள், கட்டுரைகள், காவியங்கள் இவை அனைத்தையும் விட சிறந்தது கலைஞர் உருவாக்கிய பிள்ளைத்தமிழ் முல்லை சிற்பிக்குள் முத்தாய் இருக்கும் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களை இரண்டாவது கலைஞராக மக்கள் பார்க்கின்றனர் எனபெருமைப்பட தெரிவித்தார்.

இறுதியாக கருத்தரங்க நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி பேசிய முனைவர் இரவி பாரதி:

சுதந்திர தினத்திற்கும் குடியரசு தினத்திற்கும் கொடியேற்றுபவர்கள் கவர்னர்களே இது என்ன நியாயம் எனக் கேள்வி எழுப்பிய கலைஞர் சமமாய் பிறந்ததே ஜனநாயகத்தின் சிறப்புஎன கோரிக்கை வைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அனைத்துமாநில முதல்வர்களையும் கொடியேற்ற வைத்து சாதனை படைத்வர் கலைஞர்எனப் புகழாரம் சூட்டினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மகளிர் அணிசைத்தானி பீமஸ்தான், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனி சின்னசாமி,மாவட்ட துணை செயலாளர்கள் அருணகிரி, அமுதா ரவிக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் ராஜாராம், மணிமாறன், செழியன், அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், திண்டிவனம் நகர கழக செயலாளர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன் ,பாலகிருஷ்ணன், வீடூர் ரவி ,சாந்தி ஏழுமலை, ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் மொக்தியார் அலிமஸ்தான்,முருகன், பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் புஷ்பவல்லி குப்பராஜ்,விஜயன், செல்விராம சரவணன், எழிலரசி ஏழுமலை, மனோ சித்ரா ராஜேஸ்வரன், மகேஸ்வரி குமரேசன், துணைச் சேர்மன்கள் ஜெயபாலன்,விஜயலட்சுமி முருகன், புனித ராமஜெயம், ராஜலட்சுமி செயல்மணி ,அமுதா கல்யாண் குமார் மாவட்ட அணி அமைப்பாளர்கள் ராஜசக்தி, அன்சாரி ,ரவிச்சந்திரன், அண்ணாதுரை, எஸ். செந்தில்குமார், க.செந்தில் குமார், பா.செந்தில் குமார், தமிழரசன், சந்திரன், மரக்காணம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் தியாகராஜன், சிவராமன், தயாளன், தேவி ராஜதுரை,சந்திரசேகர் ,தனசேகரன், குப்புராஜ், மரக்காணம் மத்திய ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், செல்வம், சுரேஷ்குமார், சுமதி பார்த்தசாரதி, ரவிசங்கர், வடிவேல், பாபு ,சிவசங்கர், மரக்காணம் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் குமார், சரவணன், ரவிக்குமார், மீனா குமாரி, முருகன், ஆதிகேசவன், தேவதாஸ், ராமமூர்த்தி, மரக்காணம் பேரூர் கழக நிர்வாகிகள் இளவரசன், தேசப்பன், செல்வராஜ், மகாலட்சுமி சுந்தர்ராஜ், அன்பழகன், முகமது அலி, கார்த்திகேயன், பக்தவத்சலம் ,சிதம்பரம் ஏழுமலை, தனிகன் ,கணேசன், மரக்காணம் பேரூர் கிளை கழக செயலாளர் பாஸ்கர் ,நாகராஜன், விநாயகமூர்த்தி, கந்தன், கலைவாணன், சிராஜுதீன், கணபதி, ஜெயபாலன், சசிகுமார், உதயகுமார்,பார்த்திபன், யாசின் , கார்த்திக், மூர்த்தி, தினகரன், சிவா, சதாசிவம், ராம்கி, மரக்காணம் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கீதா குணசேகரன், சத்தியவாணி, கோபால கிருஷ்ணன், வேலு, அசினா அமானுல்லா, தங்கம் நல்வழி, உமல் அபியாயாசின், பிரபாகரன், முத்துவேல், உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய குழு பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் ,பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார் ,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பலராமன் ஆகியோர் செய்தனர். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வெற்றிவேல் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் எம் .ஆர். ஜி. கார்த்திகேயன் ஆகியோர் நன்றி கூறினர்.

## உக்ரைன் முக்கிய துறைமுகம் மீது

# ரஷியா டிரோன் தாக்குதல்!

## 40 ஆயிரம் டன் தானியம் நாசம்

மாஸ்கோ, ஆக.4-

ரஷியா, தனது அண்டை நாடான உக்ரைனை 2022, பிப்ரவரி மாதம் ஆக்ரமித்தது. இதனை எதிர்த்து உக்ரைன், அமெரிக்கா உட்பட பல மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை கொண்டு ரஷியாவை தீவிரமாக எதிர்த்து வருகிறது. இதில் இரு தரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டு பல அப்பாவி பொதுமக்கள் பலியாகினர். ரஷிய உக்ரைன் போர் தற்போது 525 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகின்றது.

இந்நிலையில், உக்ரைன் ருமேனியா எல்லை வழியாக ஓடும் டானுபே ஆற்றின் அருகே உள்ள இஸ்மாயில் துறைமுகத்தை (port of Izmail) ரஷியா டிரோன்கள் மூலம் தாக்கியது.

இதனால் அத்துறைமுகத்திலிருந்து தானியங்களை ஏற்றி செல்லும் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இஸ்மாயில் துறைமுகத்திலிருந்து தானியங்களை ஏற்றி செல்ல கப்பல்கள் அத்துறைமுகத்திற்கு உள்ளே வர இருந்தபோது இந்த தாக்குதல் நடைபெற்றது.

"ஆப்பிரிக்கா, இஸ்ரேல் மற்றும் சைனா ஆகிய நாடுகளுக்காக தானியங்களை ஏற்றி செல்ல கப்பல்கள் வர இருந்தன. இத்தாக்குதல்களால் 40 ஆயிரம் டன் தானியங்கள் சேதமாகியிருக்கிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தலின்படி,தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலுடன், பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பொ.துறிஞ்சிப்பட்டி அரசு மேல் நிலைப் பள்ளியில் 155 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது.பள்ளியின் தலைமையாசிரியர் ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக்குழு உறுப்பினரும்,கழக ஒன்றிய கழக செயலாளருமான பி.எஸ். சரவணன், ஒன்றிய குழு தலைவர் திருமதி.உண்ணாமலை குணசேகரன், ஒன்றியக் குழு உறுப்பினர் தாரணிராஜேஷ்,பி.பள்ளிப்பட்டி ஊராட்சிமன்றதலைவர் திருமலாதினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.